## சார்பு நீதிமன்றம், செஞ்சி

**அ.வ.எண். 166/2021** **நாள்.03.03.2025**

2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 3-ம் நாள் வாதி தரப்பு **2ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | வீராசாமி | சாதி | |
| கிராமம் | தாயனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 53 |

**வா.சா.2**
**குறுக்கு விசாரணை**

வாதி அழைத்தின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பெங்களூரில் எக்ஸ்போர்ட்டில் டெய்லராக பணிபுரிந்து வருகிறேன். தற்போதும் பெங்களூரில் தான் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் தாயனூர் கிராமம். வாதி செஞ்சி பெரியகரத்தில் வசித்து வருகிறார். 2,3,4 பிரதிவாதிகளின் தந்தை ஆலம்பூண்டி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். வாதி எனக்கு உறவினர். அதனால் எனக்கும் அவருக்கும் பழக்கம். இறந்துபோன நாகேந்திரபிள்ளை எனக்கு தெரியாது என்றால் தெரியும். அவரை எப்படி தெரியும் என்றால் வாதியுடன் பழக்கம் என்பதால் எனக்கு தெரியும். எங்கள் ஊரான தாயனூருக்கும் செஞ்சிக்கும் 29 கி.மீ தூரம். எங்கள் ஊருக்கும் ஆலம்பூண்டி கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் தெரியாது. உங்கள் ஊரிலிருந்து செஞ்சிக்கு வரவேண்டும் என்றால் ஆலம்பூண்டி வழியாகத்தான் வரவேண்டும் என்றால் 3 வழிகள் உள்ளது.

இறந்துபோன நாகேந்திரபிள்ளை விவசாயம் செய்பவர் என்றால் சரிதான். வாதி பேராசிரியர் என்றால் சரிதான். இறந்துபோன நாகேந்திரபிள்ளைக்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் உள்ளது. அவர்களுக்குள் நீண்டநாள் நட்பு உள்ளது. சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் வாதி சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 முதல் கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் பாண்டியன் த/பெ அண்ணாமலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல்நிலை சாட்சியத்தில் த/பெ வீராசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் தந்தையை அண்ணாமலை என்றும், வீராசாமி என்றும் அழைப்பார்கள். வீராசாமியும், அண்ணாமலையும் ஒருவர் தான் என்பதற்கு ஆவணங்கள் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

வா.சா.ஆ-1ல் சாட்சி கையொப்பத்தில் தந்தை பெயர் நான் குறிப்பிடவில்லை. சாட்சி கையொப்பத்தை மோகன்தாஸ் என்பவரது வீட்டில் செஞ்சி பெரியகரத்தில் வைத்து போட்டேன். பெங்களூர் பம்மன்உறல்லி சன்வேர் பேக்டரியில் சூப்ரவைசராக வேலைசெய்கிறேன். எனக்கு சம்பளம் வங்கி கணக்கில் போடப்படும். நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் தேதியில் பெங்களூரில் இருந்தேன் என்றால் சரியல்ல. கையெழுத்து ஒரு பேனாவில் போட்டதாகவும், S/O என்பது வேறு பேனாவால் எழுதப்பட்டது என்றால் இரண்டும் ஒரே பேனாவால் போடப்பட்டது. சாட்சி கையொப்பம் போட்டுள்ள இடத்தில் உங்கள் விலாசம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நாகேந்திர பிள்ளையிடம் பணம் கேட்ட விவரம் தெரியுமா என்றால் கடன் கொடுப்பதற்கு 6 மாதம் முன்பிருந்தே பணம் கேட்டார். குடும்ப செலவிற்காக ரூ.1 லட்சம் கடன் கேட்டார். முதலில் கொடுத்த பணத்தை பைசல் செய்யாததால் இந்த பணத்தை காலம் கடந்து கொடுத்தார்.

முதலில் எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் தெரியாது. மேற்படி சங்கதியை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. பணம் கொடுக்கும் போது யார் யார் அங்கிருந்தார்கள் என்றால் நாகேந்திரபிள்ளை, அமிர்தம், பத்மநாபன், மோகன்தாஸ், மோகன்தாஸ் சித்தப்பா பையன் கண்ணதாசன் ஆகியோர் இருந்தார்கள். நான் காலை 9.30 மணிக்கு வீட்டிற்கு சென்றேன். நான் போனதற்கு பின்பாக பிரதிவாதி 4 மணிக்கு தான் வந்தார். வாதி உறவினர் எனபதால் அவரது வீட்டிற்கு காலை 9 மணிக்கு வந்தேன். 20 ரூபாய் பத்திரத்தை நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். பத்திரம் வாங்கியவர் மோகன்தாஸ் மேலச்சேரி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரம் டைப் செய்யபடாமல் இருந்தது. அதன்பிறகு 4.30 மணிக்கு பத்மநாபனும், நாகேந்திரபிள்ளை ஆகியோர் சென்று டைப் செய்துவந்தார்கள்.

பத்திரம் டைப்செய்யப்பட்டு சாட்சிகள் அனைவரும் கையெழுத்து போட்டு முடிப்பதற்கு மாலை 5 மணி ஆனது. வாதியும், காலம்சென்ற நாகேந்திரபிள்ளையும் தான் டைப் செய்வதற்கு சென்றார்கள் நான் வீட்டிலேயே தான் இருந்தேன். பத்திரம் எந்த ஊரில், யாரால், எவ்வளவு நேரத்திற்கு டைப் செய்யப்பட்டது என்பது குறித்து நேரடியாக தெரியாது என்றால் செஞ்சியில் டைப் செய்யப்பட்டது. பத்மநாபன் சொல்லி எனக்கு இந்த விபரம் தெரியும். உறுதிபத்திரத்தில் 2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ம் நாள் செஞ்சி வட்டம் செஞ்சி கிராமம், ரங்கன் குமாரர் மோகன்தாஸ் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் பிரதிவாதியின் தந்தை நாகேந்திரபிள்ளையின் விலாசம் ராஜாமணிப்பிள்ளை குமாரர் நாகேந்திர பிள்ளை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 20 ரூபாய் பத்திரத்தில் 1ல் நாகேந்திரபிள்ளை கையெழுத்திட்டதாகவும், 2ல் அமிர்தம் கைரேகை வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20 ரூபாய் பத்திரத்தின் படி இரண்டு பேரும் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் ஆவணம் ஒருவர் தான் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தட்டச்சு செய்யப்பட்டது யார் என்று குறிப்பிடவில்லை, அவரது கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். பத்திரத்தில் கையெழுத்து ஒரே பேனாவால் போடப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2,3,4 பிரதிவாதிகளின் தகப்பனாரான நாகேந்திரபிள்ளை கடன் பெற்றபோது அவரது மனைவி உடன்இருந்ததாக பொய்யாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல அவரது மனைவி 1ம் பிரதிவாதி உடனிருந்து கைநாட்டு வைத்தார். அதே பத்தி 2ல் 2வது சாட்சியாக கண்ணதாசன் த/பெ ரத்தினம் கையொப்பம்

இட்டதாகவும், பத்மநாபன் த/பெ ரங்கன் வரைந்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது அதில் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நாகேந்திர பிள்ளை சர்க்கரை நோயாலும், உயர்அழுத்த நோயாலும் உடல்நிலை பாதிக்கப்பட்டு வலது கால் எடுக்கப்பட்டு வீட்டிலேயே முடங்கிஇருந்தார் என்றால் சரிதான் கடன்பெறும் போது நல்ல நிலையில் இருந்தார். இறந்துபோன நாகேந்திரபிள்ளை வாதியிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் கடன் வாங்கியிருந்தார். வாதி உங்கள் உறவினர் என்பதால் சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).